## ஜனவரி - 11

**"அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப்போல் என் இருதயத்தில் இருந்தது. அதை சகித்து இளைத்துப் போனேன்; எனக்குப் பொறுக்கக் கூடாமற்போயிற்று." - எரே 20:9**

தேவதயவிலும், ஆசிர்வாதத்திலும் சத்தியத்தினால் பிரகாசிக்கப்பட்டிருக்கிறதிலும் இந்நாள்வரை தொடர்ந்து இருக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிற நாம் கர்த்தரை மகிமைப்படுத்துவோமாக. யோவானின் அன்புள்ள குணமும், அவருடைய திறனும், ஆர்வமும் நம்மில் வெளிப்படுத்தப்படக் கவனமாயிருப்போமாக. ஏனென்றால், அவர் அன்பான சீஷன் என்று அழைக்கப்படும்போது, தன்னுடைய தீவிரமான ஆர்வத்தின் காரணமாக அவர் அப்படி இருந்தார் என்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். யோவான் தன்னுடைய சகோதரனாகிய யாக்கோப்புடன் சேர்ந்து, இடி முழக்க மக்களென்று அர்த்தங்கொள்ளும் பொவனெர்கேஸ் என்று பெயரிட்டு அழைக்கப்பட்டார். நாம் சக்தியினால் (திறனினால்) நிரம்பினவர்களாயும் இருந்து, தேவனுக்கு உடையவர்களாகிய நம்முடைய சரீரத்தினாலும் ஆவியினாலும் கர்த்தரை மகிமைப்படுத்துவோமாக. **– Z '01, 151 (R 2806).**

கிறிஸ்தவன் தீவிரமான திடநம்பிக்கையுடன் விசுவாசிக்கிறதினால், அவன் சாட்சி கூறுகிறான். நையகரா நீர்விழ்ச்சியின் தண்ணீரைக் கீழே விழாமல் தடுப்பது கூடாத காரியமாயிருப்பதுபோல, கர்த்தருடைய வார்த்தையை பகிரங்கமாகக் கூறுவதிலிருந்து விலகி இருப்பது அவனுக்குக் கூடாத காரியம். சத்தியத்தின் பேரிலுள்ள அன்பினால் அதை ஏற்றுக்கொள்ளாதவர்கள் எந்த நல்ல காரணமுமின்றி, அடிக்கடி அதைப் பகிரங்கமாகக் கூறுவதிலிருந்து விலகி இருக்கலாம். ஆனால் தேவனைப் பற்றின சாட்சியில் அன்பு கூறுகிறவர்கள், அவருடைய கிருபையை எல்லா ஏற்ற சமயங்களிலும் பகிரங்கமாகச் சொல்லுவார்கள், சொல்ல வேண்டும். **-P '33, 191.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**யாக் 1:21-23; 1பேது 2:2; எபி 4:12; 2தீமோ 2:15; யோசு 1:8; 1நாளா 16:15; யோபு 23:12; சங் 19:7-11; 40:8; 119:14-20,46,54,93,97,111,143,157-167,172; பிர 5:1; ஏசா 55:10,11; எஸ்றா 7:10; மல்கி 2:6,7; லூக் 12:42-44; அப் 4:20,31; 20:22-24; 1கொரி 9:16-23; 2கொரி 6:3-7.**

**கோபுர வாசிப்பு : Z '14, 197 (R 5489).**

**வினாக்கள்: இந்தவாரத்தில் வசனத்தின் பொருட்டு நான் வைராக்கியமுள்ளவனாயிருந்தேனா? எப்படி? ஏன்? பலன் என்ன?**